# கல்விக்கொள்கை: ஒரு மொழியா? இருமொழியா? மும்மொழியா? எது சரி?

இந்தியாவில், ஆங்கிலேயர் ஆண்ட காலம் முதலே, 1938-க்கு முன்பிருந்தே இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களிடம் வலிந்து இந்தியை எப்படியும் திணித்தே தீர்வது என்ற முயற்சி, இந்திக்காரர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழின் அழிவுக்கு வழிவகுக்கும் இந்தித் திணிப்பைத் தமிழர், உயிரீகம் உட்பட பலவகை ஈகம் செய்து எதிர்த்தும் இந்தித்திணிப்பு முயற்சி நின்றபாடில்லை. இந் நிலையையே பாவலரேறு பெருஞ்சித்திரனார்,

*ஆயிரந் தடவை இந்தியை அழித்தோம்!*
*ஆயிரந் தடவை மீண்டும் எழுதினர்!*
*ஆயிரந் தடவை இந்தியை எதிர்த்தோம்!*
*ஆயிரந் தடவையும் மீண்டும் புகுத்தினர்!*
*எந்தவோர் தடவையும் எதிர்த்த எதிர்ப்பால்*
*இந்தி நுழைவு நின்றதும் இல்லை;*
*இந்திய மடயர்கள் அதிர்ந்ததும் இல்லை!* - என்று பாடுவார்.

இந்தித் திணிப்புக்கு எதிரான தமிழர்களின் போராட்டம் என்பது இந்திய ஒன்றியத்தில் தமிழ்மொழியின், தமிழரின் அதிகார அடிப்படையிலான நிலை தொடர்பானது. இந்தித்திணிப்பு, தமிழரை இந்தியாவின் இரண்டாம்நிலைக் குடியினராக்கும் முயற்சியாகவே கருதுகின்றோம்.

காலந்தோறும் வெவ்வேறு வகைகளில், வெவ்வேறு வடிவங்களில் இந்தித் திணிப்பு முயற்சி தொடர்ந்து மக்கள் வரிப்பணத்தை (தமிழரின் வரிப்பணம் உட்பட) வாரி இறைத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த முயற்சியில் இந்திய ஒன்றிய ஆட்சியாளர்கள் கொஞ்சம் முன்னேற்றமும்

அடைந்திருக்கின்றார்கள். அது அவர்களுக்கு நிறைவளிக்கவில்லை. இப்போது, மிகத் தந்திரமாகப் புதிய கல்விக் கொள்கையின் மும்மொழித் திட்டம் என்ற உருவில் கொண்டுவந்துள்ளனர்.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் மொழிப்பாடம் பற்றிய வரலாற்றை அறிந்தால்தான் மேற்கூறிய செய்திகளின் உண்மை தெளிவாகப் புரியும். ஆங்கிலேயர் இருந்தபோதே சி.இராசகோபாலாச்சாரி தலைமையில் இந்திய தேசியப் பேராயக் கட்சியின் (INC) முதல் அரசாட்சி நடந்துவந்தது. அந்த ஆட்சி சென்னை மாகாணப் பள்ளிகளில் 1937ஆம் ஆண்டு, கட்டாய இந்தி கற்பிக்கும் முறையை அறிமுகப்படுத்தியது. அதை எதிர்த்து முதல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் தொடங்கி, மூன்றாண்டுக்காலம் நடைபெற்றது. இப் போராட்டத்தில், உமாமகேசுவரனார், சோமசுந்தரபாரதியார், பெரியார் ஈ.வெ.இரா., மறைமலையடிகள், கி.ஆ.பெ.விசுவநாதம், பாவேந்தர், சவுந்தரபாண்டியனார், திரு.வி.க., அண்ணாத்துரை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் முதலிய தலைவர்களும் பெண்கள், இளைஞர் உள்ளிட்ட பொதுமக்களும் கலந்துகொண்டு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இப்போராட்டம் உண்ணாநோன்புகள், மாநாடுகள், பேரணிகள், மறியல்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. அரசின் கடும் அடக்குமுறையின் விளைவாகத் தளைப்பட்டுச் சிறையிலிருந்த இரண்டு போராளிகளான தாலமுத்துவும் நடராசனும் உயர்நீத்தனர். பெண்கள் சிறுவர்கள் உட்பட 1,198 பேர் தளைப்படுத்தப் பட்டனர். 1939இல் இராசகோ பாலாச்சாரி அரசு பதவியிலிருந்து இறங்கியது. பின்னர்த் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிய மதராசு மாகாண ஆளுநராக இருந்த சான் எருசுகின், இந்தி கட்டாயம் என்ற உத்தரவை 21-02-1940-இல் திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.

அடுத்து, இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1948-ல் ஓ.பி.இராமசாமியார் மதராசு மாகாண முதல்வராக இருந்தபோது பள்ளிகளில் இந்தியை விரும்புபவர் விருப்பப் பாடமாகப் படிக்கலாம் எனக் கொண்டுவந்தபோது எழுந்தது. அப்போதும் கடுமையான

எதிர்ப்புகள் எழுந்ததைத் தொடர்ந்து ஓ. பி. இரா. அறிவிப்பை அடியோடு நீக்கி ஆணையிட்டுவிட்டார்.

மூன்றாம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆங்கிலத்தை முற்றாகத் தவிர்த்துவிட்டு, இந்தியை மட்டும் அலுவல்மொழியாக்க முனைந்தபோது எழுச்சியுற்றது. இந்தி மட்டும் அலுவல்மொழியாக வேண்டும் என்பதில் இந்தியத் தேசியத் தலைவர்கள் காந்தி, நேரு, பட்டேல், அம்பேத்கர், சி.இராசகோபாலாச்சாரி முதலிய அனைவர்க்கும் ஒருமித்த கருத்து இருந்தது.

இந்தியா குடியரசு ஆனதன் பதினைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்திய ஒன்றியத்தின் ஒரே அலுவல் மொழியாக இந்தி திணிக்கப்பட்டதைப் பல இந்தி பேசாத மாநிலங்கள் எதிர்த்தன. 1965 சனவரி 26ஆம்நாள் நெருங்கநெருங்க, சென்னை மாநிலத்தில் பெருமளவிலான பள்ளி, கல்லூரி மாணவர்கள் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டதால் போராட்டம் வேகம் பெற்றது. மாநிலம் முழுவதும் போராட்டம் பரவியது. காவல் துறையின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பேரணிகள், மறியல்கள், வன்முறை, தீவைப்பு, தடியடி, துமுக்கிச் சூடுகளும் தடையின்றித் தொடர்ந்தன. உணர்ச்சி வயப்பட்ட சிலர் தங்களைத் தீயிற்கு இரையாக்கி உயிர்ஈகம் செய்தனர்.

பேராயக்கட்சியின் முதல்வர் பக்தவச்சலம் தலைமையிலான மாநில அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒடுக்க நாட்டின் பாதுகாப்புப் படையினர் தமிழகத்தில் இறக்கப்பட்டனர். காசுமீருக்கு அடுத்தபடியாக நாட்டின் பாதுகாப்புக்கான படை உள்நாட்டில் இந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கே தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டது. போராடும் மாணவர்களை வரைமுறை இல்லாமல் கடுமையாகத் தாக்கி அடக்கமுயன்றனர். நூற்றுக்கணக்கான மாணவர்கள் பலவேறு ஊர்களில் துமுக்கிச்சூட்டால் கொல்லப்பட்டனர். இரண்டு காவலரும் பலி ஆயினர். நிலைமை கட்டுமீறி மோசமானதை உணர்ந்த அப்போதைய இந்திய ஒன்றியத் தலைமை அமைச்சர் இலால்பகதூர்

சாத்திரி இறங்கி வந்து, இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும்வரை ஆங்கிலம் அலுவல் மொழியாகத் தொடரும் என்ற உறுதியளித்தார். இதன் பிறகு அடக்குமுறைகளும் மாணவர் போராட்டமும் தணிந்தன.

இந்திஎதிர்ப்புப் போராட்டம் மாநிலத்தில் அரசியல் மாற்றத்திற்கு வழிவகுத்தது. 1967 சட்டமன்றத் தேர்தலில், திமுக வெற்றிபெற்றது. அதன் பின்னர்ப் பேராயக்கட்சி தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வரவே முடியவில்லை. இந்தியையும் ஆங்கிலத்தையும் அலுவல் மொழிகளாகக் காலவரையின்றிப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, இந்திரா காந்தி தலைமையிலான இந்தியஅரசால் அலுவல் மொழிகள் சட்டம் 1967இல் திருத்தப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில், முதல்வர் அண்ணா, மும்மொழிக் கொள்கை நீக்கப்படும்; தமிழும் ஆங்கிலமும் மட்டுமே கற்பிக்கப்படும்; ஐந்து ஆண்டுகளுக்குள் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் மூலமே பயிற்றுவிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்; அரசின் எல்லாத் துறைகளிலும் தமிழைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளும் விரைவுபடுத்தப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றினார். அண்ணாவின் காலத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டில் ஆங்கிலவழி கற்பிக்கும் தனியார் பள்ளிகள் புற்றீசலெனப் பெருகிப் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியைப் புறக்கணித்து மக்களின் பணத்தையும் சுரண்டி வருகின்றன. மறைமுகமாக இந்தித் திணிப்புக்கும் துணைநின்று வருகின்றன.

இப்போது, புதிய கல்விக் கொள்கை, தேசியக் கல்விக் கொள்கை, பி.எம்.சிரி. (PM SRI) பள்ளிகள், நவோதயா பள்ளிகள், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் (சமக்கரா சிக்குசா அபியான்), நடுவக் கல்வியகங்கள் (கேந்திர வித்தியாலயா) என்னும் பல பெயர்களில் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க மும்முர முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இவற்றில், நவோதயா பள்ளிகள், நடுவக் கல்வியகங்கள் (கேந்திர வித்தியாலயா) என்னும்

பள்ளிகளில் இந்தி திணிக்கப்பட்டு விட்டது. அங்கு தமிழ்ப்பாடம் அறவே இல்லை. முன்னரே குறிப்பிட்டவாறு தனியார் பள்ளிகளிலும் இந்தித் திணிப்புக்கு வழிசெய்யப்பட்டுள்ளது.

இந்திய ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியைப் பெற, தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும் (மும்மொழித் திட்டத்தை ஏற்கவேண்டும்) என்றும், தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாகரிகமற்றவர்கள் என்றும் பேசிய இந்தியக் கல்வி அமைச்சர் தருமேந்திர பிரதான் என்பாரின் செருக்குப்பேச்சு தமிழர்களைக் கொதிப்படைய வைத்தது. தமிழகத்துக்குக் கொடுக்க வேண்டிய உருவா 2,152 கோடி நிதியை இந்திய அரசு இன்னும் வழங்கவில்லை.

நாட்டிலுள்ள குடிகள் தம் தாய்மொழியைக் கட்டாயம் படித்தாக வேண்டும். அது இன்றியமையாதது; மக்கள் அனைவர்க்குமானது. இரண்டாவதாக ஒரு மொழியைப் படிக்க வேண்டிய நிலை அனைவர்க்குமானது இல்லை. தேவைப்படுவோர்க்கும் விருப்பப்படுவோர்க்குமானது. மக்கள் எல்லோர்க்கும் இரண்டாம் மொழி தேவையில்லை.

உருசியா, சீனா, பிரான்சு, சப்பான், கொரியா முதலிய நாடுகளில் மக்கள் அனைத்து அறிவியலையும் நுண்கலைகளையும் கூடத் தம் தாய்மொழி வழியே படித்து முன்னேறி உலகின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுகின்றனர். நோபல்பரிசு பெற்ற பல அறிஞர்களுக்கு அவர்கள் தாய்மொழியைத் தவிரப் பிறமொழி தெரியாது என்பது உண்மையாகும்.

மேற்கூறிய நாடுகளில் உலகின் எந்த மூலையில் எந்த மொழியில் புதிய அறிவியல் செய்தியோ பிறதுறைச் செய்தியோ வந்தாலும் உடனுக்குடன் அவர்கள் தாய்மொழியில் அச்செய்தி பெயர்த்தளிக்கப் படுகின்றது. நூல்களும் அவ்வாறே பெயர்க்கப்படுகின்றன. புதிய சொற்களை, குறியீடுகளை உடனே பெயர்ப்பதில் சிக்கல் இருந்தால் மூலநூல் சொற்களையும்

குறியீடுகளையும் அப்படியே பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால், முறையாக அவற்றிற்கான தம்மொழியின் பெயர்ப்புச் சொற்களையும் குறியீடுகளையும் கண்டுபிடித்து பிறகு மொழிபெயர்த்த நூலில், செய்தியில் திருத்தம் செய்கின்றனர்.

தமிழ்நாட்டில் இந்தவகை ஏற்பாடு அறவே இல்லாததே தமிழ்வழிக் கல்விக்குப் பெருந்தடையாக உள்ளது. இங்கு மாநில அரசிலும் இந்திய ஒன்றிய அரசிலும் பதவிக்கு வருவோர் இதில் கருத்துச் செலுத்துவதே இல்லை. ஆனால், தமிழில் அறிவியல் நூல்கள் இல்லை என்று மொழியின் குற்றமாகக் கூறும் போக்கைக் காண்கிறோம்.

தமிழ் அந்த நிலையை அடைய ஏற்பாடு செய்யும் வரை உலகளாவிய ஒரு மொழியை, அண்மைக்கால அறிவியல் முன்னேற்றம்வரை அறிந்துகொள்ள உதவும் ஒரு மொழியை, உலக இலக்கியங்களில் பெரும்பாலனவற்றை அறிய உதவும் ஒரு மொழியை, உலக மக்களில் பெரும்பாலாரோடு தொடர்பு கொள்ள உதவும் ஒரு மொழியை இரண்டாம் மொழியாகப் படிக்கலாம் என்று மக்கள் நலம்நாடும் நல்லறிஞர்கள் முடிவுசெய்ததின் அடிப்படையிலேயே தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை பின்பற்றப்படுகின்றது.

இன்னொரு மொழியைப் படிப்பது தேவை என்ற நிலையினரான மொழிபெயர்ப்பாளர், மொழி ஆய்வாளர் முதலியவர்கள் அவரவர்க்குத் தேவையான மொழியைத் தேர்ந்து படிப்பதில் தவறில்லை. அப்படித்தான் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரும் அப்பாத்துரையாரும் சோமசுந்தர பாரதியாரும் மறைமலையடிகளும் பூரணலிங்கமும் பிறரும் பல மொழிகளைக் கற்றனர்.

இனி, மூன்றாம் மொழி படிக்கவேண்டும் என்பதும் அவரவர் விருப்பத்தையும் தேவையையும் பொருத்ததாகும். விருப்பம் உடையோர், மூன்றாம் மொழி மட்டுமன்றி இன்னும் எத்தனை

மொழிகளும் கற்கலாம். அதனை யாரும் எதிர்க்கவில்லை. தமிழ்நாட்டு இந்திப் பரப்புரை அவையில் விரும்புவோர் தடையின்றி இந்தி படிப்பதைப் பார்க்கின்றோம்.

ஆனால், ஒட்டுமொத்தமாக எல்லாரும் மூன்றாவதாக ஒரு மொழியைக் கற்கவேண்டுமென்று வலியுறுத்துவது, கட்டாயப்படுத்துவது, மாந்த உரிமைகளை மதிக்காத போக்காகும். இவ்வுலகில் அறிந்துகொள்ள வேண்டிய பல்வேறு அறிவுநிலைகள் இருக்கும்போது குறுகிய வாணாள் கொண்ட மாந்தரைத் தேவையற்ற நிலையில் மூன்றாவதாக, நான்காவதாக மற்ற மொழிகளைக் கற்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்துதல் அவர்களுக்குக் கூடுதல்சுமை ஏற்றும் செயலாகும்.

இந்தியாவில் எல்லாரும் இந்தியை, சமற்கிருதத்தைக் கட்டாயமாகப் படித்தாக வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு தந்திரமான கல்விக் கொள்கை வழியாகத் திணிக்கப்படுவது மாந்தஉரிமை மீறும் செயலாகும். தமிழகத்துச் சிற்றூரிலுள்ள சிறுநில உழவர் இரண்டாம் மொழி ஆங்கிலம் படிப்பதே அதிகமாகும்.

இனி, இந்த இந்தியநாட்டில் ‘ஒற்றுமை, ஒரேநிலை’ என வலியுறுத்தி ஏமாற்றுவோர் அப்படி உண்மையிலேயே ஒற்றுமையை, ஒரே நிலையைக் கடைப்பிடிக்கின்றனரா? தமிழரை மூன்று மொழி படிக்க வேண்டுமென்று வலியுறுத்துவோரும் அவர்க்குத் துணைபோவாரும், உத்தரப்பிரதேசம், பீகார் முதலிய மாநிலங்களில் கடைப்பிடிக்கும் நிலை தெரியாதவர் என்று சொல்ல முடியாது. அங்கெல்லாம் இரண்டாம் மொழியே படிக்கும் நிலை இல்லை. இரண்டாம் மொழி சொல்லிக் கொடுக்கவே மிகப்பல இடங்களில் ஆசிரியர்களே இல்லை என்கிறார்கள். அவர்களுக்கு ஒருமொழிக் கொள்கைதான் நடைமுறையில் இருக்கின்றது. இது நாமே வலிந்து கூறும் செய்தியன்று. முன்னாள் இந்திய ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அண்மையில் தெளிவுபடுத்திய நிலையாகும். ‘ஒரே

நிலை' வற்புறுத்தும் பேர்வழிகளின் ஏமாற்றுச் செயலாகவன்றோ இஃது இருக்கின்றது!

எனவே, தமிழர்களில் பலருக்கும் ஒருமொழிக் கொள்கையே போதும். அந்த ஒருமொழிக் கொள்கை நடைமுறைக்கு வரும்வரை, அதற்கான ஏற்பாடுகளை ஆட்சியாளர் முறையாக முயன்று செய்யும்வரை நாம் இருமொழிக் கொள்கையை நிறைவில்லா மனத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கின்றது. ஆனால், மும்மொழிக் கொள்கை என்ற மோசடிக் கொள்கை தமிழர்க்கு அறவே தேவையற்றதும் ஏற்கவேண்டாத சுமையுமாகும் என்பதுடன் நம்மை அடிமை நிலைக்குத் தள்ளும் முயற்சியாக உள்ளதென்றும் நற்றமிழ் வலியுறுத்துகின்றது.

---

## அம்பேத்கர் வாழ்க!

*தாம்பட்ட இழிவும் துன்பும்*
*தம்மக்கள் படக்கூ டாதென்*
*றோம்பிய ஒழுக்கம், கல்வி,*
*உயர்பணி, பதவி பெற்று*
*மேம்பட்ட அறிவுத் தொண்டால்*
*மிகப்பயன் தந்தே, மக்கள்*
*தேம்புற மறையா நின்றார்,*
*திகழ்அம்பேத் கராம்நல் மேதை!*

*உலகப்பே ரறிஞர்க் குள்ளே*
*உலவிய பெரும்பே ராற்றல்!*
*நிலவிய இழிவு, தாழ்ச்சி*
*நீங்கிட உழைத்தே, இந்த*
*நிலவுல குள்ள காலம்*
*நிலைத்திடும் புகழைப் பெற்றார்!*
*வலவராம் அவர்நூற் றாண்டில்*
*வாழ்த்துவோம் நன்றி கூறி!*

- **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** (1991)

---

இருமனந் தோற்றிறும்! (இரு + மனம் + தோற்று + இறும்)

# உணர்வுரை

சொல்லாய்வு அறிஞர்
பேராசிரியர் ப. அருளியார்

## தமிழ்க்களத்துள் தோய்ந்திருக்கும் -எம் தலைவரின் நினைவலை!....

"என் உள்ளம் எஃகை விட உறுதியானது! அதன் போக்கு பனிமலையையும் தாண்டிக் குதிக்கும் ஆற்றல் சான்றது! அமைதிக் கடலைவிட[பசுபிக்] ஆழமானது! நிலத்தின் உள்ளே கனன்று கொண்டிருக்கும் நெருப்பைவிடச் சூடு வாய்ந்தது! இவற்றைத் தடுத்து நிறுத்தும் வல்லமை இந்நாட்டு மக்களில் எவருக்காகிலுமோ, இந்த உலகத்தின் அரசுகளில் ஏதானும் ஓர் அரசுக்கோ இல்லை! இதனை வருங்காலம் உணர்த்தும்! நேர்மைக்காகப் போராடுவதில் நான் எந்தச் சூழலுக்காவது அஞ்சவோ கெஞ்சவோ தேவையில்லை!..... (சுவடி 9, ஓலை 1 பக்கம் 14-15, 1971)

இவ் எழுச்சி மனக்குண்டத் தீக்கங்குலாகிய உணர்வினுள்தான் - எம் தலைவரின் ( எம் ஐயா பாவலரேறு "**அரிமா - துரை. மா**" அவர்களின்) தெள்ளிய வாழ்வின் பீடும் – பெருமிதமும் - செம்மாப்பும் – போக்கும் - நோக்கும் வல்லிய கொள்கை விடாப்பிடியும் செறிவுற்றுள!

"துல்" எனும் பழந்தமிழ் வேர் ஒன்று - மேலிருக்கைக் கருத்துரு வழியே தோன்றித் "துலவு" என்றும் - ஒலிப்பருகிய நிலையில் "துலா" என்றும் நின்றது! "துலா" என்பதன் பொருட்பாட்டின் கருவினைத் "தூக்கு" என்னும் சொல் வழக்கினுள் காணலாம்! அது எடையளவு மானிப்புக் கருவிக்குரிய பெயர் என்பது, ஐம்பானாண்டுகட்கு முந்தைய வழக்குகளறிந்தோர்க்குத் தெற்றெனத் தெரியும்! துலையே – தொலை என்று ஒலிக்கப் பெற்றுத் "தலை" என்றாயினது!

"தலை" என்னும் சொல் மேலிருப்புக் கருத்துக் கரு வழியேதான், நாம் பெற்றிருக்கும் உடம்பின் உறுப்பாகிய உச்சப் பகுதி,

அப்படியாகப் பெயர்ப்பேறு பெற்றுளது! தோண்ட தோண்ட ஆழம்பட்டவாறு நெட்டுக்கும் நீடி உள்ளூற்றுக் கிடக்கும் நிலை கண்டுணர்ந்த நம் தமிழனே இம் மண்நிலத்தின் மேல் நிற்கின்றோம் எனத் தெளிவுணர்ந்து தான் நின்று வாழும் இந்நிலத்திற்கும் "தலை" என்றவாறு இடப் பொருள் சுட்டினான்!...

துலை (தொலை)> தலை = மேல். அதன் தலை = அதற்கும் மேலே! (புறம்: 191:5). தலைத் தலை = மேலும் - மேலும் (பரிபா: 11-14) ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளில் ஒன்றாக இத் "தலை" என்பதனைத் தொல்காப்பியம் சுட்டியுள்ளமை, ஈண்டுக் கருதத்தக்கது! (தொல். வேற்றுமையியல் : 15:17).

தலை = மேல் > இடம் (மலைபடுகடாம் : 385). தலைத் தலை = இடந்தோறும் (பரிபா 11:10) (அகம்: 68: 16).

அகன்றிருக்கும் இடப் பரப்புடையதாகிய (பரப்பு > பார்) இந்நிலம், - நந்தமிழரால் "அகன்றலை" (=அகன்ற பேரிடம்) (பொருநராற்றுப்படை : 1) -"மலர்தலை" (= விரிவகன்ற இடம்) (மதுரைக் காஞ்சி : 199) - "நனந்தலை" (= அகலிதான இடம்) ( ஒப்புநோக்க : "நனவே களனும் அகலமும் செய்யும்" (தொல். சொல்.உரி : 78) (சான்றிடம் : பட்டினப்பாலை : 193) என்றவாறெல்லாம் சுட்டப் பெற்றுளது! - தண்டலை (தண்தலை = குளிர்ந்த நிலம் > பூஞ்சோலை). இன்றும் நின்று நிலைக்க வழங்கி வரப்பெறும் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த "குழித்தலை" என்னும் ஊர்ப் பெயரும், இவ்விடத்து நினையத்தக்கது!

இலத்தீனத்துள் - இத் "தலை" எனும் தமிழ்ச் சொல் "tellus" என்றவாறு படிவெய்திப் பேராளமான சொல்லாட்சித் திரிபுகளைப் பெற்றுப் பல்கியது! ஆங்கிலத்துள்ளும் இதன் பதிவுகள் நீளின!

இதனை (இத் தலையை) (-கொச்சையில் "தல") இங்கு வந்தேறிய ஆரியர் "S" என்னும் முன் மிகையொலி (PROTHESIS) இயைத்து "Sthala" என்றவாறு நலித்தொலித்து நைவித்தனர்! (இதன் விரிவு விளக்கங்களை என் வேரியல் சார் நூல்களுள் பலபடியான சான்றாய்வுகளொடு துலங்கக் காண்கலாம்!) "தலை" என்னும் இடப்பொருட்பாட்டுச் சொல்லினின்றே "தரை" என்றவாறு லகர – ரகரத்

திரிபேற்று வழங்கப்பெற்றுள்ளது! (காண்க "வேரும் விரிவும்"1 பக்கம்: 139-153)

இத் தலையைக் குறித்தெழுந்த கிரேக்க வழிச் சொல்லாகிய Cephalo (Cephalikos) என்பதனையே "கபால" (கபாலம்) என்றவாறாக (கருதுக : கபால ஈசுவரர்> கபாலீசுவரர் - இதுவாவது ("மண்டையோடு ஏந்தி" (மண்டையோடுடையான்!) ஆரியர் நம்மிடையே கொண்டுவந்து கலப்புறுத்தினர்; கலக்கினர்!

இந்த "Cephalo" எனும் கிரேக்கச் சொல்லே பல்வேறு மொழி நெருக்கிடைக்காட்பட்டு ஆங்கிலோ-சாகசானியத்தில் (A.S) "Hafela" என ஒலிப்புற்று - பிறகு heafod > heaved > heued என்றவாறெல்லாம் நீடி, இடையாங்கிலத்துள் (M.E) head எனத் திறம்பி யொடுங்கி இறுதியிலாக இற்றையாங்கிலத்துள்ளும், நிலைகொண்டுள்ளது! (E) Head = the uppermost part of the body; that part of the body above the neck)

இந்த "Head" என்றவாறு வழங்கும் ஆங்கிலச் சொல், இக்கால் பதின்மூன்று வகைப்பாட்டு பொருட்பேறுகளைச் செறிவித்துக் கொண்டுள்ளது. முப்பதுக்கும் மேற்பட்ட கூட்டுச்சொற்கள் விளர்ந்துள! இந் நாட்டுள் ஆங்கிலவராட்சியுள் காவலர்கட்குத் தலைவர் எனும் பொருட்பாட்டோடு "Head - Constable" என்றவாறு ஒரு கூட்டுச்சொல் வழங்கியது! இன்றும், அதன் நிழல் நீட்சி உளது! அக் கூட்டுச் சொல்லின் சுருக்கச் சுட்டாக அக்காலே Head என வழங்கி - வாய் நீட்சியில் (Head >) "ஏட்டு" என விரித்தொலிக்கப்பெற்றது! அதன் தொடர் நிழலும் இன்றும் வழக்கில் உளது!

நம் பாவலரேறு ஐயா அவர்கள் இக் காவலர் தலைவர் ஒருவரைத் தந்தையாகக் கொண்டு பிறப்பெடுத்தவர்! அப் பெரியோர் ஆகிய தந்தையின் இயற்பெயர், "துரைசாமி" என்பதாகும். அவர் ஒரு சேலவாணர்!

தன் பெயர்த்தியொருத்திக்குக் கணவனாகப் போகின்றவனின் (அவனாகியோன் நானே - இவ் அருளியே!) இல்லச் சூழல், வாழ்வியல் சூழல் பற்றிய புலன்கள் அறியும் பொறுப்பு நோக்கோடு எம்

இல்லத்திற்கே வந்து உசாவி இயைந்தவர்! பத்துப் பதினைந்து மணிநேர அளவிடையில் எங்களோடு தோய்ந்தவர்! வியப்புக்குரிய தூய பண்பு வடிவத்தவர், அவர்! அளவற்ற அன்பெழுச்சியும் அளவமைந்த உரை அளவளாவலும் - அமைதியும், பணிவும் சான்ற பார்வையும், பொருந்திய நன்னடையும் வாய்ந்த பெருமகனார், அத் துரைசாமி ஐயா!

இத் தலைமைக் காவலரிடம் நான் அன்று கண்டு வியந்தது - தலையாய பண்பின் உச்சமாகிய பணிவாரும் பழகுமுறையே!

"பணியுமாம் என்றும் பெருமை" (குறள் : 978) எனும் வள்ளுவப் பெருந்தகையின் காட்சியறிவிப்பு - அன்று என் முன் நேர்நின்றது! 'முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம் இன்சொ லினதே அறம்' - (குறள் : 93) என்றவாறு யாப்புற்றுக் கிடைத்துள்ள குறளுள், அறம் என்பதன் காட்சி - கேட்சிப் பொருட்பாட்டின் இலக்கண அறிவிப்பொன்றை நம் வள்ளுவர் பெருமான் செய்துள்ளார்.

”எதிரிலுள்ளார் எவரோ அவரின் முகத்தொடு முகம் பொருந்தி விருப்பார்வமொடு இனிமையாக உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கும் அதே வேளையில் - அகத்தின் (உள்ளத்தின்) உள்ளிருந்து ஊற்றெழுந்து பெருக்கெடுக்கும் இனிய நன்னறுஞ் சொற்கள் புறப்பாடுறுவது மட்டுமே, அறம்!" என்றவாறான பொருட்பாட்டுக் குறளுக்கு எடுத்துக்காட்டாகி நிற்கும் நடத்தையே, துரைசாமி என்னும் பெயரிய அப் பெருஞ்சான்றோரின் பழகுமுறை!... அவரின் ஒவ்வோரசைவும் வியப்பையே விளைவித்தது! சிலிர்த்துப் போனேன்!

அத் தகு தலைமையாளரின் தலைமகனே, எனக்கும் (என் வாழ்விலும் அதன் நீட்சியிலும்-) நிலைத்து நின்று நீடிக்கும் தலைவராயினார்! அதுவாவது, என் இயக்கத் தலைவரானார்! "தலை"!... என்ற சொல் கொண்டே பாவேந்தரைச் சுட்டும் வழக்கு, பாவலரேறுவுக்கும் உண்டு! (காண்க – கொய்யாக்கனி - முன்னுரை 12/8/1982 - இரண்டாம் பதிப்பு)

இப் பெருஞ்சித்திரப் பெரியாரிடம் அமைந்திருந்த கொள்கையிலக்கு முத்திறக் கூட்டு சார்ந்தது! தமிழ் மொழி - தமிழினம் -

தமிழ்நாடு எனும் முப்பிரிவுகளின் ஒருமுகக்கூட்டின் விடுதலை பற்றியது அவ் இலக்கு!... இவ் இலக்கே அதற்கு தலையாயதாய் இருந்தது! அதற்கான இயக்க வினைகளின் தொகுப்பே, அவரின் தூய பெருவாழ்க்கை!

இத் தலைமகனார் பிறப்பெடுத்ததினின்றே தனிப்பட்ட செந்தகைமை கொண்டவராகவேயிருந்தார்! தனியர் இவர் என்பதனையே இவர் வாழ்வு பதிவு செய்கின்றது! துணையாளரில்லாத - அமையாத தனியர்! தனிவீறு படைத்த தன்னந் தனியர்!

"தொண்டு தொண்டு என்றே என்
வாழ்வைத் தொலைத்துக் கொண்டேன்!
என்னைக் கொன்று கொண்டேன்! இவ்
இனத்தை மீட்க நின்றேன்!
தன்னந் தனிய னானேன்! - என்
தாயும் இரக்கப் பட்டாள்!..."

என்றவாறெலாம் வெளிப்படுத்தியுள்ள இவரின் இத்தகு கூற்றுகளினுள் நெஞ்ச நோக்காட்டையும் - தமிழினத்தவரே ஏற்படுத்திய மனவழுத்தத்தையும் - துயரக் குமுறலையும் - வெளிப்படவே காணுகின்றோம்!

என் வாழ்க்கையின் போக்கு எப்படி அமைந்தியல்கின்றது, தெரியுமா?.. தலைப்பிடுகையிலேயே இதனை முற்றாகத் தெள்ளத் தெளிவுறும் வகையிலாகத் தெரிவித்துவிடுகின்றார்! "நெருப்பாற்றில் எதிர்நீச்சல்!" என்பது, அத் தலைப்பு!

இடர்கள் – இக்கட்டுகள் – இடுக்கண்கள் – தொல்லைகள் – துன்பங்கள் – ஊறுகள் - உறுத்தங்கள் என்றவாறு இறுக்கும் இவற்றை யெல்லாம் நீந்திக் கடந்து செல்லும் கடுமுயற்சித் தொடர்ப்பாட்டாலமையும் கொள்கை நோக்க வாழ்வுப் போக்கு என்னுடையது!

வாழ்ந்தாலும் தமிழுக்கும்
தமிழர்க்கும் வாழ்வேன்!
வளைந்தாலும் நெளிந்தாலும்
தமிழ் பொருட்டே ஆவேன்!
தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும்
தமிழ்மேல்தான் வீழ்வேன்!
தனியேனாய் நின்றாலும்
என்கொள்கை மாறேன்!

சூழ்ந்தாலும் தமிழ்ச்சுற்றம்
சூழ்ந்துரிமை கேட்பேன்!
சூழ்ச்சியினால் பிரித்தென்றன்
உடலையிரு கூறாய்ப்
போழ்ந்தாலும் சிதைத்தாலும்
முடிவந்த முடிவே!
புதைத்தாலும் எரித்தாலும்
அணுக்களெலாம் அதுவே! (கனிச்சாறு : 2 : 90 : 1975)

இம் மேற்குறித்த பாடலடங்கிய தொகுப்புக்கான தலைப்பாக, ஐயா அவர்கள் பதித்திருக்கும் தெளிவுச் சுட்டுகை "தனியேனாய் நின்றாலும் என் கொள்கை மாறேன்!" என்பதனுள், அவர்க்கேயுரித்தாய் அமைந்த உள்ள வல்லுறுதியினையே காண்கின்றோம்! தான் தனிப்பட்டிருக்கும் தகைமைத் தெளிவையும் அதனுள் பதிவு செய்திருக்கின்றார்!

விடமாட்டேன்!... படமாட்டேன்!... உளம் நடுங்கேன்!... வினை ஒடுங்கேன்!... என்றவாறெல்லாம் அடுக்கடுக்காக்கி விடுக்கும் வீச்சின் ஓச்சில் கொள்கையியக்க மூச்சுயிர்ப்பே முற்பட்டியங்கும்! படிப்பார்க்கும் பாடுவார்க்கும் உறுதியூட்டி உவப்பேற்றுந் தகைமையன, அவை!

"எத்தனை இழிவுகள் பழிகளைக் கூறினும்
என்செயல் நடக்கும் விடமாட்டேன் - ஒரு
சித்தனைப் போல்முன் பின்உணர்ந் ததனால்
சிறுஅள வதிர்ச்சியும் படமாட்டேன்!
பித்தனைப் போலவும் பேடியர் போலவும்
பிதற்றுவார் தூற்றலுக்கு உளம் நடுங்கேன்!
முத்தனை தமிழில் இனத்தினில் நாட்டில்
முழுவுளம் பதித்தேன்! வினை ஒடுங்கேன்!"
(தென்மொழி : சுவடி 20 - ஓலை 5-6)

நான் ஓர் உண்மை உழைப்பினன்! நேர்மை உளத்தினன்! போராளி! என்னுடைய இயக்கப் போக்கில் மாற்றம் என்னப்பெறும் மறுதலை என்பது எங்ஙனம் நிகழும்? இல்லவே இல்லை!... இயலாது!

ஊருக்கு நல்லன செய்யும் - ஓர்
உண்மை உழைப்பின னாக
நேருக்கு நேர்நின்று பேசும் - ஒரு
நேர்மை உளத்தின னாக
யாருக்கும் அஞ்சுத லின்றி - ஒரு
யானை வலிமையி னோடு
போருக்கென வந்து விட்டேன்! - என்
போக்கில் மறுதலை யில்லை!...

தான் தெளிந்து எடுத்துக் கொண்டு இயக்கப் படுத்தி வாழ்ந்துவரும் கொள்கையின் தகைமை எதிர்காலத்துள் எப்படியாகப் பரவ வேண்டும் (அல்லது பரவப் போகின்றது!) என்பதனை, ஓரிடத்துள் இவ்வாறு பதிவு செய்கின்றமையைக் கூர்ந்து பாருங்கள்!

"எம் கோள்,
பொறியாய் எரியாய்க் கனலாய் அனலாய்
குறிப்பெறச் சிதறுக! புயலுருக் கொள்க!...
(கனிச்சாறு: 1: 125)

அவரின் அறிவு அவர்க்கே வியப்பாகித் தோன்றி ஒளிர்ந்தது! அதன் வழி, அவரே வல்லிய உறுதியும் செயலாண்மையும் துன்பத்துள் பொறுதியும் கொண்டவராகி நின்றியங்கினார்!

"அன்பிலே மழைத் தண்ணீர்!
அறிவிலே பெருநெருப்பு!
ஆற்றலில் சூறைக் காற்று!
தென்பிலே மாமலை!
தெளிவிலே நீர்நிலை!
திரிதலில் வானப் பறவை!
என்பிலே நல்லுறுதி!
இயல்பிலே தமிழுணர்வு!
எண்ணத்தில் தமிழர்
மேன்மை! வரும்
துன்பிலே துணிந்த மனம்!
துயிலிலே விழித்த நிலை!
துவளாத வாழ்வென் வாழ்வே!"

(துவளாத வாழ்வு - என் வாழ்வு!)

இப்படியாக இயன்றது, அவரின் தூய திடாரிக்கப் பெருவாழ்வு!

தாம் இயற்றும் பாக்களின் அருந்திற வன்மையின் பெருமையைப் பெருமிதச் செம்மாப்புடன் அவர் வெளிப்படுத்தும் பாங்கே, தனீஇ அழகுடையது! அதிலுள்ள செருக்கார்வு மிளிர்வை உற்று ஓருங்கள்! உணர்விலும் உயிரிலும் குருதியிலும் நம்மைப் புல்லரிக்கச் செய்யும் விரைவு வீச்சொளி அதனுள் விளங்கித் தோன்றும்!

இப்படிப்பட்டதாகிய என் நெருப்பாற்றலை அறிவிலாப் புல்லியர் எவரொருவராலும் தடுத்து நிறுத்த இயலுமோ? எனத் தோள் தட்டுகின்றார் ஓரிடத்தில்!...

தீக்குழம் புருக்கித் தெறிக்கும் எரிமலைப்
பாக்குழம் பினையொரு பழம்பாய் தடுக்குமோ?!..

(கனிச்சாறு: 1 :59)

ஒறுத்தலச் சுறுத்தலே! (ஒறுத்தல் + அச்சுறுத்தல் + ஏ)

வினவு தெரிந்த காலத்தினின்று ஒரே நோக்கும் - போக்குமாகவே ஒருவர் தொடர்ந்து இயங்குதல் என்பது, அரிதினும் அரிதாயது!... நம் ஐயாவின் வாழ்வியக்கத்துள் இந் நீட்சித் தொடர்ச்சியை - அறாது இயன்ற அத் தகு அரும் போக்கை நாம் நம் விழிகளை அகலித்தவாறே வியந்துதாம் காணவியல்கின்றது!

1951இல் இவரின் அகவை, 18 !... அப்பொழுதில் இவரியற்றிய பாவொன்றனுள் படிவெய்தியுள்ள வரிப் பொருளைக் காண்கையில் வியப்பே மேம்படுகின்றது!

"கனித் தமிழ்க்குத்
தொண்டாற்றி மாய்ந்திடுவோம்!
என்பதுவே நமக்கோர் ஏவல்" (1951)
(ஏவல் என்பது ஏவப்பெற்றுள்ள கட்டளை!)

1952இல் இவரின் அகவை 19 !...

அப்பொழுதேயே, நந்நாட்டு விடுதலை மீட்புக்கான இவரின் நெஞ்ச விருப்பினோடியைந்த இருப்பு அச்சாணியானது, இவரியங்கிய வாழ்வியல் வண்டிச் சக்கரத்துள் செருகப்பட்டு இயல்வதை ஈண்டு உற்றுப்பாருங்கள்!

நங்கையரின் மேன்மையெலாம்
நவின்றான் கம்பன்!
நாம் வேண்டாப் பாரதத்தைப்
புகன்றான் வில்லி!
வெங்கொடுமைப் போர்பற்றிச்
சயங்கொண் டானை
விளித்துவிட்டோம்! நஞ்சையுண்டு
பிறையைக் கொண்ட
கங்கைமுடி யானுடைய
புரட்டுக் கண்டோம்!
காணாத உலகத்தைப் புளுகு நூலில்

இங்கு கண்டோம்; இவையெல்லாம்
நமக்கு வேண்டா;
இந்நாட்டை மீட்பதற்கே
பாடல் வேண்டும்!
(கனிச்சாறு:2 : 3. பக்கம் : 5)

தமிழக விடுதலை நோக்கு என்பது, ஐயா. துரைமாவின் 19-ஆம் அகவையிலேயே அவர்பால் துளிருந் தளிரும் விட்டுத் தழைக்கத் தொடங்கிவிட்ட காட்சியை இம் முற்குறிப்பிட்ட பாவின் இறுதிவரியினுள் காணுகின்றோம்! முற்றா அகவையின் முனையிலேயே பற்றியெரியத் தொடங்கிவிட்டது, இவ்வகை விடுதலையுணர்வு! அதற்கெனப் பாட்டு வேண்டுகின்றது, இத் தூய உள்ளம்!

**(உணர்வுரையின் தொடர்ச்சி அடுத்த இதழில் நிறைவுறும்)**

---

# செந்தமிழை வென்றெடுத்த சீரியலாளன் ஔவை!

*உரைவேந்தர் என்றுபுகழ் ஒண்புலவர் ஔவை*
*துரைசாமி தோன்றியபின் அன்றோ - நரைவாரும்*
*தெள்ளுதமிழ் நூல்களெல்லாம் தீந்தமிழாய்த் தித்திக்கக்*
*கொள்ளுமுயர் செம்பொருளைக் கொண்டு!*

*ஆரியத்தால் வேய்ந்த அழிவுரைகள் மாய்ந்தொழிய*
*வீரியத்தால் செந்தமிழை வென்றெடுத்தார் சீரியத்தால்*
*ஔவை துரைசாமி ஆய்ந்துபல நூலுரைகள்*
*செவ்வியவாய் நேரியவாய்ச் செய்து!*

- **பாவலரேறு பெருஞ்சித்திரனார் (1981)**

---

ஔவிப் பழுக்கழி! (ஔவிப்பு + அழுக்கு + அழி)

# பைந்தமிழில் படிப்பதுதானே முறை!

*பழந்தமிழ் நாட்டில்*
*பைந்தமிழ் மொழியில்*
*படிப்பதுதானே முறை?*
*இழந்தநம் உரிமை*
*எய்திடத் தடுக்கும்*
*இழிஞரின் செவிபட, அறை!*

*கனித்தமிழ் நிலத்தில்*
*கண்ணெனுந் தமிழில்*
*கற்பது தானே சரி!*
*தனித்தமிழ் மொழியைத்*
*தாழ்த்திய பகையைத்*
*தணலிட் டே, உடன் எரி.*

*தமிழ்வழங் கிடத்தில்*
*தாய்மொழி வழியாய்த்*
*தமிழர் படிப்பதா பிழை?*
*அமிழ்ந்தவர் எழுந்தால்*
*அயலவர்க் கென்ன?*
*அயர்வதா? நீ,முனைந் துழை!*

*பிறந்தநம் மண்ணில்*
*பீடுறும் தமிழில்*
*பேசுதற் கோ,ஒரு தடை?*
*மறந்த,பண் பாட்டை*
*மறவர்கள் மீட்க*
*மறிப்பவர் எவர்?கொடி றுடை!*

*முத்தமிழ்த் தரையில்*
*முதுதமிழ் மொழியில்*
*முறைப்படப் பயில்வதா தீது?*
*எத்துறை அறிவையும்*
*ஏற்குநந் தமிழே!*
*இனியுங்கள் பருப்பு,வே காது!*

*அத்தனை, பாட்டனை*
*அடிமைசெய் ததுபோல்*
*ஆரையிங் கரற்றுவாய் இன்னும்?*
*எத்தனை ஆண்டுகள்*
*இழப்பதெம் உரிமை?*
*எழுந்திடின் கழுகுமைத் தின்னும்!*

- **பாவலரேறு பெருஞ்சித்திரனார் (1970 )**

.

---

# தமிழ் படித்தால் வாழ்வு புதுமைபெறும்!

*அறம்பெருகும் தமிழ்படித்தால்;*
*அகத்தில் ஒளிபெருகும்!*
*திறம்பெருகும்; உரம்பெருகும்;*
*தீமைக் கெதிர்நிற்கும்*
*மறம்பெருகும்; ஆண்மைவரும்!*
*மருள்விலகிப் போகும்!*
*புறம்பெயரும் பொய்மையெலாம்!*
*புதுமைபெறும் வாழ்வே!*

- **பாவலரேறு பெருஞ்சித்திரனார் (1967)**

---

ஆண்மைவல் லாளுமை! (ஆண்மை + வல் + ஆளுமை)

# சிந்தனைப் பெருவரை!

**- பேராசிரியர் அருளியார்**

தமிழ்நிலத் திகுந்துவாழ்ந் தமிழ்ந்திழிந் திகலிய
தமிழவர் தழைத்தெழத் தம்மையே ஈந்துவந்
தணுவணு வாகநற் புதுவிளை வறுத்தே
யெணுந்திறல் வேந்தா யிந்நில முழுமையுங்
கடுவுலாச் சுழன்றே யடுபோர் மறவராய்
வடுவிலா தியங்கிவண் வாழ்ந்துடன் மறையினும்
மறையா வுயிர்ப்பொடு மன்னிநம் முள்ளுறை
கரையிலாச் செம்மலிங் காரெனி லுரைப்பேம்
குறைவிலா வுளவுரச் சிந்தனைப் பெருவரை
பெரியார் தந்தை பெரியா ரொருவரே!

வரை = மலை
இகுந்து = தாழ்ந்து
இகலிய = மாறுபட்ட, முரணான
எணுந்திறல் = எண்ணுந் திறல், சிந்தனைத் திறம்

(பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாடநூலாக வைக்கப்பட்ட தமிழியக்கம் தடை செய்யப்பட்டபோது, புதுச்சேரி அரசு அச்சகத்தில், நாங்கள் 'தமிழியக்கம்' என்ற ஒரு கையேட்டு இதழ் நடத்திய போது இந்தக் கையேட்டு இதழுக்காக என்னால் அருளியார் அவர்களிடம் இருந்து பெரியார் பிறந்த நாளையொட்டி, எழுதி வாங்கப்பட்ட பாடல், இது! பாடலைத் 'தமிழியக்கம்' இதழில் வெளியிட்டோம்.

**- பாவலர் சீனு. தமிழ்மணி)**

இளியேல் சிரிநகை! (இளியேல் + சிரி + நகை)

# அகத்தியர் புரட்டு: தமிழ், தமிழர்க்கு எதிரான சூழ்ச்சி! - 2

இந்திய ஒன்றியஅரசின் கல்வி அமைச்சராக இருக்கும் தருமேந்திர பிரதான் என்பவர், அகத்தியமுனி, தமிழ் இலக்கியத்தை முதன்முறையாக எழுதியவர் என்றும் காசிக்கும் தமிழகத்துக்கும் இடையிலான சிறந்த இணைப்பாக இருந்தார் என்றும், செம்மொழி தமிழின் இலக்கியத்தில் அகத்தியரின் பங்கு அதிகமானது என்றும் தமிழ்மொழியில் அகத்தியர் பல நூல்களை எழுதியுள்ளார் என்றும் உரிய தரவுகள் சான்றுகளின்றிக் கூறியிருக்கின்றார்.

இரங்கத்தக்க நிலை! அவருக்குச் சொல்லித் தந்தவர் ஒன்றால் தமிழ் இலக்கியம் அறியாதவராக இருக்க வேண்டும் இன்றேல் வேண்டுமென்றே பொய் உரைத்திருக்கவேண்டும்! அகத்தியமுனி, தமிழ் இலக்கியத்தை முதன்முறையாக எழுதியவராம்! முதன் முறையாக இல்லாவிட்டாலும் இறுதியாகவேனும் ஏதாவது ஒரு கழக(சங்க)ப்பாடல் அவர் பெயரில் உண்டா? பத்துப்பாட்டில் ஏதேனும் ஒரு பாட்டேனும் எழுதியிருக்கின்றாரா? அன்றி எட்டுத்தொகைப் பாடல் தொகுப்புகளில் ஏதேனும் ஒரு பாடலாவது எழுதியுள்ளாரா? பதினெண் கீழ்க்கணக்கில், ஐம்பெரும்பாவியங்களில், பிற நூல்களில் கூட அவர் எழுதியதாக எதுவும் இல்லை.

அகத்தியர் பேரில் நிறைய கற்பனையான கட்டுக்கதைகள் பலகாலமாக நிலவிவருகின்றன. உரையாசிரியர்கள் அக்கதைகளின் உண்மையை ஆராயாமல் அவர் பெயரைக் கையாண்டுள்ளனர். அவ்வளவே! கழக(சங்க) இலக்கியங்களில் பாடல் ஆசிரியராக எங்கும் அகத்தியர் பெயர் இல்லவே இல்லை.

கழக இலக்கியங்களிலேயே பிற்காலத்ததென்று கூறப்படும் 'பரிபாட'லில் ஓரிடத்தில் 'பொதியில் முனிவன்' என்ற பெயர் காணப்படுகின்றது. (இலக்கியம் படைத்தவராக இல்லை). பரிபாடலில்

வையை என்ற தலைப்புடைய பாடல் பதினொன்றில் 10-13ஆம் அடிகளில் கீழ்க்காணுமாறு உள்ளது.

*"மதிய மறைய வருநாளில் வாய்ந்த*
*பொதியில் முனிவன் புரைவரைக் கீறி*
*மிதுன மடைய..."*

- இதன் பொருள், "இராகு மதி மறையும்படி வரும் நாளிலே, பொதியில் முனிவன் (அகத்தியன்) என்னும் மீன் உயர்ந்த தன் இடத்தைக்கடந்து மிதுன ராசியைச் சேர" – என்பதாகும். எனவே, ஒரு விண்மீனைக் குறிக்கும் பெயராக, பொதியில் முனிவன் என்ற பெயர் இடம் பெறுகிறது, அவ்வளவே!

புறநானூறு 201ஆம் பாடலில் வரும் 'வடபால் முனிவன்' என்ற பெயர் அகத்தியரைக் குறிப்பதெனக் கூறிக்கொள்கிறார்கள். 'வடபால் முனிவன் தடவினுள் தோன்றி' என்றது, சம்பு முனிவன் வளர்த்த வேள்வித் தழலில் வந்த வேளிர் மரபில் வந்தவன் (இருங்கோவேள்) என்பதைக் குறிப்பது. (தடவு – வேள்வி) இதுவும் கற்பனையான பழங்கதையாகலின், ஆராய்ச்சிக்குரியதன்று என ஆய்வாளர் (ஞா.தே.பா.முதலியோர்) குறிக்கின்றனர்.

அகத்தியர் எழுதியதாக அகத்தியம் என்னும் ஓர் இலக்கண நூலைக் குறிப்பிடுகின்றனர். அந்நூல் தொல்காப்பியத்திற்கும் முந்தியது என்ற கதையும் தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்ற கதையும் கூட உண்டு. இவற்றிற்கெல்லாம் எந்த அடிப்படைச் சான்றும் இல்லை. சில உரையாசிரியர்கள் அடிப்படைச் சான்று இலாது கூறப்பட்ட கதைகளை வைத்தே அகத்தியரைக் குறிப்பிட்டு எழுதியிருக்கின்றார்கள் என்று ஐயுற வேண்டியிருக்கின்றது. அந்தக் கதைகள் அறிவுக்கொப்பாத, அறிவியலுக்கொப்பாத கதைகளே.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூற்றுக் கணக்கான சிறிய பெரிய படைப்புகள் முழுமையாகக் கிடைக்கின்றன. எழுநூறு ஆண்டுகளுக்கு முன்புவரை (மயிலைநாதர் காலம் வரை) தொடர்ந்து பலரது பார்வையில் பட்டதாகக் கூறப்படும்

அந்த அகத்தியம் என்ற இலக்கண நூல் முழுமையாகவோ அன்றிச் சிதைந்தோ இதுவரை ஒரு சுவடி கூடக் கிடைக்காமல் போனது ஏன் என்றும் ஆய்வர் வினவுகின்றனர்.

சில நூல்களுக்கு உரையாசிரியர்கள் எழுதிய உரைகளில் மேற்கோளாகச் சில நூற்பாக்களைக் காட்டியுள்ளனர். அவ்வளவுதான். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைத்த அவ்வரைகுறை அகத்திய நூற்பாக்கள் எனக் கூறப்படுபவை சிறந்தவையாகக் கொள்ளக்கூடியன அல்ல என்பதுடன் அவை மிகமிகப் பிற்கால நடையை ஒத்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். அகத்தியர் இயற்றியதாக வேறு எந்த நூலும் தமிழில் கிடைத்ததாகத் தெரியவில்லை. அவர் பல நூல்கள் இயற்றியுள்ளார் என்று கூறுகிறவர்கள் அவற்றில் ஓரிரு நூல்களையும் கூடக் கூறுவதில்லை.

இவையுந் தவிர, தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் எழுதிய பனம்பாரனார், தொல்காப்பியர், *“முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தார்”* என்றதோடு, *“ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்”* என்று குறிப்பிட்டுக் காட்டுகையில் அகத்தியம் என்ற ஒரு பெயரைக் குறிப்பிடவே இல்லை. *‘அறம்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டு ஆசாற்கு’* என எழுதிய பனம்பாரனார் அகத்தியர் பெயரை எங்கும் குறிப்பிடவில்லை. இந் நிலையில் தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்ற ஒரு கதையைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

முக்கழகத்தில் (முச்சங்கத்தில்) முதலிரண்டு கழகங்களிலும் அகத்தியர் இருந்தாரெனக் கதை கூறப்படுகின்றது. “அவர் முதற் கழகத்தில் 4440 ஆண்டுகள் இருந்தார் என்றும் இரண்டாம் கழகத்தில் 3700 ஆண்டுகள் இருந்தார் என்றும், ஆக இரு கழகங்களிலும் 8140 ஆண்டுகள் அகத்தியர் ஒருவரே இருந்தார் எனவும் கூறுவது பொருந்துமா” என்று ஆராய்ச்சியாளர் கா. நமச்சிவாயர் வினவுகின்றார்.

அகத்தியர் என்னும் சொல் தொல்காப்பியத்திலோ, கழக இலக்கியத்திலோ, சிலப்பதிகாரத்திலோ, நன்னூலிலோகூட இல்லை என்று குறிப்பிட்டோம். ஆனால், சிலம்பின் உரையாசிரியர்கள் அகத்தியரைப் பற்றிக் குறிப்பிடுவதைக் காண்கின்றோம். மணிமேகலையில் நாட்டில் நிலவிய கதையொன்றின் தொடர்பாக நேரிடையாக அகத்தியன் என்ற பெயர் இடம்பெற்றுள்ளது.

*"செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்*
*கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட அமர*
*முனிவன் அகத்தியன் தனாது*
*கரகம் கவிழ்த்த காவிரி பாவை"* - என்னும் அடிகள் உள்ளன.

(இதன் பொருள்: சிவந்த கதிர்களையுடைய ஞாயிற்றின் வழித் தோன்றினோராகிய சோழர் மரபினை விளக்குமாறு உதித்த காந்தமன் எனப் பெயரிய மன்னவன் நாட்டில் நீர்ப் பெருக்கினை விரும்பி வேண்டிக் கொள்ள, தேவ முனிவனாகிய அகத்தியன் தனது கமண்டல நீரைக் கவிழ்த்தலாற் போந்த காவிரியாகிய பாவை – என்பதாகும்). எனவே, இக்கதை 'மணிமேகலை' காலத்திலேயே வழக்கில் இருந்திருக்கின்றது.

கம்பர் தம் இராமாயணத்தில், அகத்தியர் பற்றிய கற்பனைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு இராமர் முதலியவர்களோடு தொடர்புபடுத்திச் சில இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். இவை தவிர பாரதத்திலும் பிற்காலப் பெரிய புராணம், கந்தபுராணம், மச்சபுராணம் முதலிய பழங்கதைகளிலும் (புராணங்களிலும்), தேவாரப் பாடல்களிலும் அகத்தியர் பற்றிய கதைகள் காணப்படுகின்றன.

'அகத்தியர்' என்ற பெயரில், பலர் இருந்துள்ளனர் என்றும் ஆரிய அகத்தியர் வேறு, தமிழ் அகத்தியர் வேறு என்றும் ஆய்வாளர்கள் வேறுபட்டுக் கருத்துரைக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில், கம்பர் காலக்கணக்கையும் கருத்தில் கொள்ளாமல் அகத்தியர் ஒருவரே எனக் கொண்டதாலும் அவர் குறித்த எல்லாக் கற்பனைக் கதைகளையும் உண்மை என ஏற்றதாலுமே தம்

இராமாயணத்தில் அவரைப் பற்றிய கதைகளைச் சேர்த்துள்ளார். அவ்வாறே பாரதத்திலும் அக்கதைகள் இடம்பெற்றுள்ளன.

கம்பஇராமாயணத்தின் மூல நூலாசிரியரான வான்மீகி அவருடைய இராமாயணத்தில் அகத்தியர் பொதிய மலையில் வாழ்ந்ததாகக் குறிப்பிட்டு இருக்கின்றார். இக் குறிப்பிலிருந்து அகத்தியர் தமிழ் முனிவர் என்பதும், இராமாயண காலத்திலேயே தென்னாட்டில் பொதியமலைச் சாரலில் வாழ்ந்து தமிழ் வளர்த்து வந்தார் என்பதும் பெறப்படுகின்றன என்றும் அவர் தமிழ் அகத்தியரேயாவர் என்றும் தமிழ்நாட்டவரேயாவர் என்றும் சில ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர்.

கந்தபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்த கச்சியப்பர் அந்த அகத்தியரைத் தமிழ் அகத்தியர் என்றே குறிக்கின்றார். அவரை ‘மலயத்து வள்ளல்’ என்றும், ‘தமிழ் மாமுனி ’ என்றும் கந்தபுராணம் காட்டுகின்றது. எனவே, ஒரு கதையின்படி அகத்தியர் சிவபெருமான் மணம் காணச் சென்றிருந்தாலும், அவர் தமிழ்நாட்டிலிருந்து சென்றார் எனக் கொள்ளல் வேண்டும் என்று அறிஞர் அ.மு.பரமசிவானந்தம் கூறுகின்றார்.

முன்பே குறிப்பிட்டவாறு, கா.சுப்பிரமணியப்பிள்ளை அகத்தியர் இருவர் என்று கூறுகிறார். மறைமலையடிகள், மிகப்பழங்காலத்தே இருந்த அகத்தியர் தமிழ்நாடு புகுந்தவரல்லர் என்றும் அவர் தமிழ் அறிந்தவரும் அல்லர் என்றும் கூறுகிறார். அகத்தியர் பலர் என்று ஆய்வாளர் கா.நமச்சிவாயர், துடிசைகிழார் அ.சிதம்பரனார், இரா.இராகவையங்கார் முதலானோர் கூறுகின்றனர். “அகத்தியர் இருவராய் இருக்கலாமோ’ என ‘வி.எ.சுமித்து’ என்னும் வரலாற்று ஆய்வாளரும் ஐயுறுகிறார். (The oxford History of India, by V.A. Smith .p.42 1958 Edition).

அறிஞர் ஆ. சிவலிங்கனார் ‘அகத்தியர்கள்’ என்னும் அவருடைய ஆய்வுநூலில், ”அகத்தியர் ஒருவர் அல்லர். நால்வருக்கு மேற்பட்டு இருந்திருத்தல் வேண்டும், அவருள் தமிழ் அகத்தியர்

இருவர். ஆரிய அகத்தியர் இருவர். இந் நால்வருமே சிறந்தவர்கள். பிற அகத்தியர்களும் இருந்திருக்கின்றனர்" என்று கூறுகிறார்.

ஆய்வாளர் முனைவர் ப.தங்கராசு, "அகத்தியர் என்னும் பெயருடையோர் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் பலர் வாழ்ந்துள்ளனர்; இவர்களுள் தமிழகத்தில் அகத்தியர் பெயரால் எழுவர் இருந்துள்ளனர். வடநாட்டில் வேத காலத்திலும், பாரத, இராமாயண காலத்திலும் அகத்தியர்கள் இருந்துள்ளனர். இவர்கள் ஆரிய அகத்தியர்கள் என்றும்,வட நாட்டில் மட்டுமின்றி, கம்போதியா, சாவகம் போன்ற கீழை நாடுகளிலும் அகத்தியர்கள் வாழ்ந்துள்ளனர்" என்றும் கூறுகின்றார்.

பி.தி.சீனிவாசையங்கார், "சமசுகிருத நூல்களில் இசுவாகு காலம் முதல் கிருட்டினன் காலம் வரையில் கூறப்படும் அகத்தியர்கள், வசிட்டர்கள், விசுவாமித்திரர்கள் ஒரு தனி அகத்தியர், விசுவாமித்திரர் வசிட்டர்களைக் குறிப்பனவல்ல. அவை குடும்பப் பெயராகப் பலருக்கு வழங்கிய பெயர்களாகும். அப் பெயர்கள் குடும்பப் பெயரேயன்றித் தனிப்பட்டவர்களுக்குரிய பெயர்களல்ல" என்கிறார்.

*(One of the most illuminating suggestions of his (Partigers) is that the Agastyas, Vasisthas, and Viswamitras mentioned in the Sanskrit works were not each one man who baffles the reader by appearing and reappearing in every age from that of Iksvaku to that of Sri Krishna: History of the Tamil-P. liv-P. T. S. Iyengar.)*

துடிசைகிழார் அ.சிதம்பரனார், "அகத்தியர் என்னும் பெயர் அடைகொடுக்கப்பட்டு வழங்காததால், நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் பலநாட்டு அகத்தியர்களுடைய வரலாறுகளை ஒரே அகத்தியர் வரலாறு என்று கருதி, நூல்களிலும் உரைகளிலும் எழுதிவிட்டார்கள். படிப்பவர்களும் பிரித்து அறிந்து படிப்பதில்லை. இப்படிப் பல அகத்தியர்களுடைய வரலாறுகள் ஒன்றுபட்டுக் கிடப்பதால், சில புலவர்கள் அகத்தியர் என்னும் பெயர் உடையவர்

பலர் இருந்திருக்க வேண்டும் என்று முடிவுகட்டுகிறார்கள். இது சரியான முடிவே ஆகும்” என்று எழுதியுள்ளார்.

இன்னுஞ் சிலர், அகத்தியர்கள் முனிவர், சித்தர், சோதிடர், மருத்துவர், மெய்யியல் ஞானி, மொழிஅறிஞர் என்று அறுவரென்று எவ்வகைத் தரவுகளும் சான்றுகளும் இன்றிக் கூறி வருகின்றனர். ஆனால், செம்மொழித் தமிழ் நிறுவனத்தின் பண உதவியில் ஆங்காங்கே நடைபெறும் அகத்தியக் கருத்தரங்கங்களில் உரை நிகழ்த்துவோர், செய்தி ஊடகங்களில் கட்டுரைகள் வடிக்கும் ‘தினமணி’ வகையார் ஆகிய மேதைகளும் கோதைகளும் ஒன்றிய அமைச்சர் ஒப்பித்ததைப் போல, அகத்தியர் ஒருவரே எனக் கருத்திற் கொண்டு அவரைப் பன்முகத் திறனாளியாகக் கட்டமைத்துக் கூறி வருகின்றனர்.

சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழையும் பாணினிக்குச் சங்கதத்தையும் (வடமொழி) கற்றுக்கொடுத்தான் என்ற கதை உள்ளது. அகத்தியர் முருகப்பெருமானிடம் தமிழ் கற்றவர் என்ற பெருமையை உடையவர் என்று இன்னுமொரு கதையும் இருக்கிறது. ஆனால், ஒன்றிய அமைச்சர் தருமேந்திரப் பிரதான், அகத்தியரிடம்தான் முருகன் தமிழ் இலக்கணம் கற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது என்று புதுக்கதை விடுகின்றார்.

நாவலர் சோமசுந்தர பாரதியார், “சிலர் அகத்தியரன்றோ தமிழ் மொழியை உண்டாக்கினார் என்று நினைக்கலாம். சிலர் வடமொழியும் தமிழ்மொழியும் சிவபெருமானானல்லவோ தோன்றின என்று எண்ணலாம். கடவுள் மொழிகளை உண்டாக்கினார் என்று கூறுவதை விட மொழிகள் கடவுள்களை உண்டாக்கின என்று கூறுவது சாலப் பொருந்தும். புராணேதிகாசங்கள் பாடினோர் மக்கள் மனத்தகத்துப் பத்திப்பயிர் விளைப்பான், எல்லாம் கடவுளால் தான் உண்டாயிற்று என்று கூறுவர். அவர்கள் அங்ஙனம் கூறார்களெனின் அவர்கள் பாடும் புராணக் குவியல்கள் பயனிலவாய் ஒழியும்” என்று எழுதியுள்ளார். (தமிழும் தமிழரும் பக். 100)

செல்வகேசவராய முதலியார் க.மு. அவர்கள், “அகத்தியர் தமிழைத் தாமே படைத்தாரென்பது எவ்வாற்றானும் பொருந்தாது. ஒரு பாஷையை ஒருவர் உண்டாக்கினாரென்பது பாஷா தத்துவ சாத்திர முடிவுக்கு முற்றும் முரண்பாடாகும். கடவுட்டன்மை ஒருவற்கேற்றி அவன் தானாகவே ஒரு பாஷையைச் சிருஷ்டித்து இலக்கியங்களையும் உண்டாக்கிப் பலரும் பயிலச் செய்தான் என்பது பிரகுர்தி விரோதமான அசம்பாவிதமேயாகும். “இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பல்”, பன்னாட்டிலுள்ள பாவலர்க்கும் நாவலர்க்கும் உடன்பாடாயிருப்ப அகத்தியர் தாமே இலக்கியம் கற்பித்து இலக்கணமும் இயற்றினாரென்பது பொருந்துமா?” என்கின்றார்.

வி.கோ.சூரியநாராயண சாத்திரியார் அவர்கள் “தமிழ் மொழியின் வரலாறு” என்னும் நூலிற் கூறுவது: -- “தமிழ்ப்பாஷையின் தோற்ற விஷயமாக யாம் மேற்கூறிப் போந்தன அனைத்தும் எவ்வாறு கருதப் படினும் படுக. கருத்துக்கள் தன் முயற்சியானெழும் ஒலிகளின் சம்பந்தமாகவே வெளிப்படுகின்ற இயல்பினின்றுமே பாஷைகளுண்டாத லியலும் என்பது யாவரும் மறுக்கமுடியாததோர் பாஷைநூ லுண்மை. இவ் வுண்மையை யொட்டியே தமிழ்ப்பாஷையின் தோற்றமும் ஏற்பட்டிருத்தல் மிகவும் கவனிக்கற்பாலதே. ஈதிவ்வாறாகத் தமிழ் நூலாசிரியர் பலரும், இக் காலத்தினும் ஆங்கிலநூற் பயிற்சியில்லாத நண்பருட்சிலரும் தமிழ்மொழியும் வடமொழியும் தேவபாஷைக ளென்றும் இவ்விரண்டும் முறையே அகத்தியனார்க்கும் பாணினியார்க்கும் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டன” என்றும் கூறாநிற்பர்.

உ. வே. சாமிநாதய்யர் கூற்று: “இவர் (அகத்தியர்) வருவதற்கு முன்னரே இந் நாட்டிலிருந்த தமிழையும் அதனிலக்கணத்தையும் இவர் தந்தாரென்று கூறியிருப்பது உபசாரவழக்கு” என்பதாகும். (சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்)

சில மெய்யியல் நூல்களையும், மருத்துவ நூல்களையும், கணிய (சோதிட) நூல்களையும் அகத்தியர் எழுதியதாகக் கூறி

வருகின்றனர். (அகத்தியர் கருப்பசூத்திரம், அகத்தியர் மருத்துவம், அகத்தியர் செந்தூரம், சமரச நிலை ஞானம், அகத்தியர் ஐந்து சாத்திரங்கள், வாகடம், பூசாவிதி, இரசவாத சூத்திரம் எட்டு முதலிய பல) இவர் எழுதிய நூல்களாகக் கூறப்படுவனவற்றின் பெயர்களைப் பார்த்தாலேயே இவை மிகவும் பிற்கால நூல்கள் எனத் தெரிகின்றன என்றும் இவர் எழுதியதாகக் கூறப்படும் நூல்களின் பாடல்களில் பயின்றுவந்துள்ள சொற்கள் இவரைப் பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்பதைத் தெரிவிக்கின்றன என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட பிற்கால நூல்களின் ஆசிரியராக ஓர் ஈர்ப்புக்காக அகத்தியர் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு காலக்கட்டத்தைச் சார்ந்தவர்கள், வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள், வெவ்வேறு நம்பிக்கை கொண்டவர்கள் என்ற கருத்தும் ஆய்வறிஞர்களால் முன்வைக்கப்படுகின்றன.

ஒன்றிய அமைச்சர், தமிழ் அரசர்களான சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் குலகுருவாகவும் அகத்தியர் இருந்துள்ளார் என்று கூறியிருக்கின்றார். உண்மை என்னவென்றால் வேள்விக்குடிச் செப்பேட்டிலும் சின்னமனூர் செப்பேட்டிலும் பாண்டிய மன்னர்களின் சடங்காளராக(புரோகிதராக)வும் குலகுருவாகவும் அகத்தியரைக் கொண்டிருந்தனர் என்றும் பாண்டியர்கள் நிலங்களைப் பார்ப்பனர்களுக்குத் தானமளித்ததாகவும் குறிப்புள்ளது என்கின்றனர். இவை பிற்காலச் செய்திகளே. வரலாற்றுத் துறை ஆய்வாளர்கள் திரு.கணியன்பாலன் முதலானோர் செப்பேட்டுச் செய்திகள் நம்பகத்தன்மையற்றவை என்று கூறுவதும் எண்ணத் தக்கதாகும்.

முனைவர் ப.தங்கராசு, “அகத்தியர் என்னும் பெயருடையோர் தென்னிந்தியாவினின்று கீழை நாடுகளுக்குச் சென்று கம்போதியாவில் இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் பரப்பியதோடு அரச பரம்பரையையும் தோற்றுவித்துள்ளனர். சாவகத்தில் முதன் முதலில் சிவன் கோயிலைக் கட்டியவர் பாண்டியநாட்டினின்று சென்ற, அகத்தியர் என்றறிய முடிகிறது.

சாவகத்திலும், பாலியிலும் அகத்தியர் பெயர் சத்தியம் செய்வதற்கு உரிய பெயராகப் பயன் படுத்தப்பெற்றுள்ளது." என்கிறார்.

இச் செய்திகளைக் கொண்டே அமைச்சர் தருமேந்திர பிரதான், அகத்தியர் வழிபாடுகள் கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா, சாவா, கம்போடியா, மற்றும் வியத்நாமில் நடத்தப்படு கின்றன என்கின்றார்.

இனி, எழுத்தாளர் மாலன் வகையாரின் அகத்தியர் தொடர்பான கருத்துகள் உள்ளீடற்றவையாயிருப்பதைத் தக்க சான்றுகளுடன் காட்டுவோம். அகத்தியர் பற்றி இதுவரை வந்துள்ள ஆய்வுநூல்கள் என்னென்ன என்றும் அவை கூறும் ஆய்வுமுடிவுகள் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

(அகத்தியர் புரட்டு... தொடரும்)

## நற்றமிழ் இதழுக்குப் புரப்புக்கட்டணம் வழங்கியோர்:

| எண் | திருவாளர்கள் | உருவா |
|---|---|---|
| 1. | 'செவாலியே' சு. ஆ. வெங்கடசுப்புராயர், புதுச்சேரி | 5000 |
| 2. | தமிழ்மாமணி துரைமாலிறையனார், புதுச்சேரி | 1000 |
| 3. | திருக்குறள் தூயர் இராம. கோவிந்தன், தென்னிலை | 1000 |
| 4. | தலைமையாசிரியர் கலியபெருமாள், பூந்தோட்டம் | 1000 |
| 5. | பாவலர் இரா. வேலாயுதம், சேலியமேடு | 500 |
| 6. | தமிழ்த்திரு இர. அரசு - விலாசினி அரசு, புதுச்சேரி | 500 |
| 7. | 'திருக்குறள் தகைமையாளர்' நாவை சிவம், மணற்பாறை | 500 |
| 8. | தமிழ்த்திரு கந்தகுமாரன் பாலு, காட்டுமன்னார்கோயில் | 240 |
| 9. | தமிழ்த்திரு இரா. தமிழழகன், திருக்கழுக்குன்றம் | 240 |
| 10. | பாவலர் சின்னசாமி, போடிநாயக்கனூர் | 240 |
| 11. | தமிழ்த்திரு த. மன்றவாணன், சேலியமேடு | 240 |

**புரப்புக்கட்டணம் வழங்கிய நற்றமிழ் அன்பர்களுக்கு நன்றி!**

# அருந்தமிழ்த் தொண்டர் அண்ணல்தங்கோ!

குடியாத்தம் முருகப்பன் அண்ணல்தங்கோ, (1904 ஏப்பிரல் 12 – 1974 சனவரி 4) தனித்தமிழ்உணர்வாளர்; தமிழ்த் தேசியக் கொள்கையர்; தமிழ் மண்ணின் விடுதலை விரும்பிய உணர்வாளர்; ஆரிய எதிர்ப்பு இயக்கத்தின் பெயரில் உள்ள 'திராவிட' என்னும் சொல்லைத்'தமிழ்' என மாற்ற வற்புறுத்திய கொள்கையாளர். இந்திய விடுதலைப் போராளி; எழுத்தாளர்; பாவலர்; நூலாசிரியர்; இதழாசிரியர்; திரைப்படப் பாடலாசிரியர் எனப் பன்முகத்திறனாளியாவார்.

பெற்றோர் முருகப்பன் – மாணிக்கம்மாள். வேலூர் மாவட்டம் குடியாத்தம் என்னும் ஊரார். பெற்றோர் இட்ட பெயர் சுவாமிநாதன் என்பதாகும். இளம் அகவையிலேயே தந்தையை இழந்ததால் தொடக்கக் கல்விக்குமேல் படிக்க வாய்ப்பில்லை. இருப்பினும், தம்சொந்த முயற்சியால் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சங்கதமொழிகளைக் கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

தம் பதினான்காம் அகவையிலேயே பேராயக்கட்சியில் சேர்ந்தார். 1922இல், ஈ.வெ.இராமசாமிப் பெரியார் தலைமை வகித்த திருப்பத்தூர் வட்ட அரசியல் மாநாட்டை நடத்துவதில் முதன்மையாளராக இருந்தார். 1923இல் மதுரையில் கள்ளுக்கடை மறியல் காரணமாக இருமுறை மும்மூன்று மாதங்களென ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையை அடைந்தார். நாகப்பூரில் தடையைமீறி இந்தியக் கொடியை ஏற்றி வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்டதால் ஏழு மாதங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை பெற்றார். 1925இல் நிகழ்ந்த வைக்கம் போராட்டம், 1928இல் சயுமன் குழு எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறை சென்றார்.

1927இல் ஆங்கிலேயக் கொடுங்கோலன் நீலன் சிலை உடைப்புப் போராட்டம் காரணமாக ஓராண்டுக் கடுங்காவல் சிறைத் தண்டனை பெற்றார். தண்டனை தந்த நயனகர் நாடகத்தந்தையாகப்

போற்றும் பம்மல் சம்பந்தனார். சிறையில், பம்மல் சம்பந்தனார் எழுதிய ‘இலீலாவதி சுலோச்சனா’ எனும் நாடகத்தை நடத்தி, அதில் அண்ணல்தங்கோவே கதைநாயகனாக நடித்துச் ‘சிறை வாழ்வாளிகள் நலநிதி‘யைத் திரட்டித்தந்தார். அந் நாடகத்தில், ஆங்கில ஆட்சியின் வல்லாண்மைக்கெதிராகத் தடை செய்யப்பட்ட முழக்கத்தை முழங்கினார். அம் முழக்கத்தைக் கேட்டு, சிறை அதிகாரிகள் மிரண்டு போயினர். வரதராசுலு நாயுடுவுடன் இணைந்து வ.வே.சு. ஐயருக்கு எதிரான குருகுலப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

1927 இல் சங்கதம் என்னும் சமற்கிருதம் தவிர்த்த தமிழ்த் திருமணத்தில் தூய தமிழில் திருக்குறளைக் கூறித் தம் திருமணத்தைத் தாமே நடத்தி, சிவமணி அம்மாளை மணந்தார். இதன் மூலம் ‘திருக்குறள்’ நெறி தமிழ்த் திருமணத்தை’ அறிமுகப்படுத்தினார். அண்ணல்தங்கோவே நூற்றுக்கணக்கான தமிழ்த் திருமணங்களைத் தலைமை தாங்கி நடத்தி வைத்ததைப் பேராசிரியர் க.அன்பழகன் தாம் எழுதிய “தமிழர் திருமணமும் இனமானமும்” என்ற நூலில் புகழ்ந்துரைக்கிறார்.

1934 பெப்புருவரி 18இல் பெரு முயற்சியில் திரட்டிய தீண்டாமை ஒழிப்பு நலநிதி அளிப்புக் கூட்டத்திற்குக் காந்தியடிகளைக் குடியாத்தம் அழைத்து வந்தார். ஏதோ காரணமாகக் காந்தியாருடன் வந்த இராசாசி, தி.எசு.எசு.இராசன் இருவரின் வற்புறுத்தலில், நிதியை மட்டும் பெற்றுக் கொண்ட காந்தியடிகள் அண்ணல்தங்கோ ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளாமல், முன்னரே இசைவு தந்திராத ஆம்பூர் பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டுச் சென்றார். இதனால் மனம் உடைந்த அண்ணல்தங்கோ பேராயக் கட்சியினின்றும் விலகினார்.

1936இல் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் இணைந்தார். (இதுவே பின்னர் நீதிக்கட்சி என அழைக்கப்பட்ட அமைப்பாகும்). ஈரோடு சென்ற அண்ணல்தங்கோ பெரியாரின் குடி அரசு இதழில் சிறிது காலம் துணையாசிரியராகப் பணிபுரிந்தார். 1944இல் இந்த அமைப்பும் தன்மதிப்பு இயக்கமும் இணைந்த புதிய

அமைப்பு உருவான போது, அதற்குத் ‘தமிழர் கழகம்’ எனப் பெயரிடுமாறு அண்ணல்தங்கோ, கி.ஆ.பெ.விசுவநாதம், சவுந்தரபாண்டியன், தங்கவேலு முதலானோர் வலியுறுத்தினர். ஆனால் அக் கருத்து ஏற்கப்படாமல் ‘திராவிடர் கழகம்’ எனப் பெயரிடப்பட்டது. அதனை எதிர்த்து அண்ணல் தங்கோவும் கி.ஆ.பெ.விசுவநாதமும் பிறரும் அந்த அமைப்பை விட்டே விலகினர்.

அண்ணல்தங்கோ 1937இல் வேலூரில் “உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப் பேரவை”யைத் தொடங்கினார். ஆண்டுதோறும் பொங்கல் விழா நடத்தி, அவ் விழாவில் தமிழ் அறிஞர்கள், தேவநேயப்பாவாணர், ஔவை துரைசாமி, கி.ஆ.பெ.விசுவநாதம், அ.கி.பரந்தாமன், வெள்ளைவாரணனார், இலக்குவனார், பாவேந்தர், திருக்குறள் முனுசாமி, சிதம்பரநாதன், மே.வீ.வேணுகோபாலர், ஆதித்தனார், திருக்குறள்பீடம் அழகரடிகள், மு.வரதராசன், டாக்டர் தருமாம்பாள், மயிலை சிவமுத்து, கா. அப்பாத்துரை முதலானோரை உரையாற்றவைத்து மக்களிடம் தமிழ்உணர்வை வளர்த்தார். 1937இலும் 1938இலும் “தமிழர் உரிமை மாநாடு”களை நடத்தினார்.

1942இல் ‘தமிழ் நிலம்’ என்ற இதழைத் தொடங்கி நடத்தித் தமிழ் உணர்வு ஊட்டினார். ‘பராசக்தி’ திரைப்படத்திலும், ‘பெற்ற மனம்’, பசியின் கொடுமை’, ‘கோமதியின் காதலன்’ ஆகிய திரைப்படங்களிலும் பாடல் எழுதி இருக்கிறார்.

, வடமொழிக் கலப்பின்றி, தூயதமிழில் பேசும் வழக்கமுடையவராக இருந்ததால், பெரும்புலவர் மே.வீ. வேணுகோபாலர், திருக்குறள்பீடம் அழகரடிகள் இருவரும் இணைந்து ‘தூய தமிழ்க் காவலர் அண்ணல்தங்கோ’ என்ற சான்றிதழை அளித்தனர். அண்ணல்தங்கோ தம் மகனுக்குத் ‘தமிழர்தங்கோ’ என்றும், பெண் மக்களுக்குத் ‘தமிழரசி’, ‘நாவுக்கரசி’ என்றும் பெயரிட்டழைத்தார்.

மறைமலையடிகளாரின் நாட்குறிப்புத் தொகுப்பு நூலான “மறைமலையடிகளாரின் அடிச்சுவட்டில்” எனும் நூலில், அடிகளாரிடம் அண்ணல்தங்கோ நெருங்கிப் பழகியிருந்ததை

அடிகளாரே பதிவிட்டுள்ளார் என்ற செய்தி, தொடக்கப்பள்ளியில் மட்டுமே படித்துப் பின்னர்த் தானே கற்றுயர்ந்த அண்ணல்தங்கோவின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றிப் பெரும்பேறாகும்.

தமிழுணர்வுமிக்க இவரே தமது வடமொழிப் பெயர் சாமிநாதன் என்பதைத் தூயதமிழில் அண்ணல்தங்கோ என மாற்றிக்கொண்டார். அது மட்டுமன்றித் தாம் பழகுவோரின் பெயர்களைத் தூய தமிழ்ப்பெயராக மாற்றியமைத்த பெருமைக்குரியவராக அண்ணல்தங்கோ விளங்கினார். அவர் தமிழாக்கி வழங்கிய பெயர்கள்: காமராசர் - காரழகனார், கருணாநிதி - அருள்செல்வம், சி.பி.சின்ராசு -- சி.பி.சிற்றரசு, கிருபானந்தவாரியார் – அருளின்பக் கடலார், தனபாக்கியம் - பொற்செல்வி, காந்திமதி - மணியம்மை, கி.ஆ.பெ.விசுவநாதம் -- கி.ஆ.பெ.நெடுந்துறைகோ, சி.பா.ஆதித்தனார் - சி.பா.பகலவனார், மே.வீ.வேணுகோபாலர் - மே.வீ. குழற்கோமான், தருமாம்பாள் – அறச்செல்வியார், சனார்த்தனம் – மன்பதைக்கன்பன், நாவலர் சா.சோமசுந்தரபாரதியார் - சா.நிலவழகனார், எனப் பட்டியல் நீளும். அரங்கண்ணல், 'நினைவுகள்' என்ற தன்வரலாற்று நூலில், அரங்கசாமி எனும் தம்பெயரை, பெயர்மாற்றத்தந்தை அண்ணல்தங்கோ இசைவோடு 'அரங்கண்ணல்' என்று மாற்றிக் கொண்டேன் எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழறிஞர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் ஒரு அவையில் சொற்பொழிவாற்றும் போது, "அதோ வந்திருக்கிறார் அண்ணல்தங்கோ! இங்கே நான் பேசும்போது, எத்தனை வடமொழி, பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகிறேன் என்று எண்ணி எண்ணி, அதனை என்னிடம் கூறிக் குத்திக் காட்டவே வந்திருக்கிறார்" என்றாராம்.

1972இல் இந்தியா விடுதலை அடைந்த வெள்ளிவிழா நிகழ்வில் கலந்துகொள்ள அண்ணல்தங்கோ அழைக்கப்பட்டார். அப்போது, விடுதலைப் போராட்ட வீரர்க்கான தாமிரப்பதக்க விருதை அன்றைய தலைமை அமைச்சர் இந்திராகாந்தி நேரடியாகத் தந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக இந்திய ஒன்றிய அரசு வேலூரின் நடுவான பகுதியில் அளித்த 15 குறுக்கம் (ஏக்கர்) நிலத்தை அரசுக்கே திருப்பியளித்தார்.

அண்ணல்தங்கோ, ‘அண்ணல் முத்தம்மாள் பாடல்கள்’, ‘மும்மூர்த்திகள் உண்மை தெரியுமா?’, ‘சிறையில் நான் கண்ட கனவு (அல்லது) தமிழ்மகள் தந்த செய்தி’, ‘அறிவுப்பா’, ‘என் உள்ளக்கிழவி சொல்லிய சொல்’, ‘நூற்றுக்கு நூறு காங்கிரசு வெற்றிப்படைப் பாட்டு’ முதலான நூல்களை எழுதியுள்ளார். அண்ணல்தங்கோவின் படைப்புகள் 2008ஆம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

வாழ்வு முழுதும் தன்னலமற்ற தூய தொண்டராக வாழ்ந்த தமிழ் உணர்வாளரான அண்ணல்தங்கோ, குடற்புண் நோயால் தாக்குண்டு 1974, சனவரி 4இல் மறைந்தார். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், மிக வருந்திக் கண்கலங்கிக் கீழ்க்காணும் இரங்கற்பா பாடினார்:

**அண்ணல்தங்கோ, அண்ணல்தங்கோ!**
*“சேயவன் வழுத்தொடு செந்தமிழ் பேணித்*
*தூய தமிழ்க்கா வலனெனத் தோன்றித்*
*தேயப் பிரிவைத் தீர்க்கத் துணிந்த*
*அண்ணல்தங்கோ அண்ணல்தங்கோ*
*தன்முயற் சியினால் தன்னை உயர்த்தி*
*மன்னியல் விடுதலை மாண்ட மறவ*
*உள்ளுவ தெல்லாம் உயர்வே யுள்ளித்*
*தெள்ளிய கொள்கை திறம்பாச் சான்றோய்*
*நீயெமை மறப்பினும் நினைமற வேமே*
*சேயரும் கேளிரும் நேயரும் ஆயேம்*
*மாயிரு ஞாலம் மன்னிய காலே*
*தெள்ளிய கொள்கை திறம்பாச் சான்றோய்!”*

அண்ணல்தங்கோ தெளிவான கொள்கைகளாகக் கொண்டிருந்தவை தனித்தமிழ், தனித்தமிழ்நாடு, எண்ணுவதெல்லாம் உயர்வாய் எண்ணும் பண்பு போன்றவை! “தூய தமிழ்க் காவலன்”,

தேயப் பிரிவைத் (தேசப் பிரிவை) தீர்க்கத் துணிந்த – மன்னிய விடுதலை மறவன்” என்றெல்லாம் பாவாணர் போற்றுகிறார்.

குடியாத்தம் நெல்லூர்பேட்டை அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் ’கு.மு. அண்ணல்தங்கோ நூலகம்’ அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டரசு, கு.மு. அண்ணல்தங்கோவிற்குக், குடியாத்தத்தில், உருவா 50 இலக்கத்தில், மணிமண்டபத்துடன் கூடிய திருவுருவச் சிலை அமைக்க இருப்பதாக அறிவித்துப் பணிகள் மேற்கொண்டது. திறப்புவிழா நடந்ததாகத் தெரியவில்லை.

12-4-2025ஆம் நாள் அண்ணல்தங்கோவின் 126ஆம் பிறந்தநாளாகும். அவர் நினைவைப் போற்றுவோம்! அவர் பணிகளைத் தொடர முயல்வோம்!

## நற்றமிழை வாழ்த்திடுவோம் நாம்!

நறைவழியும் செம்மொழியாம் நற்றமிழைக் காத்த
இறைவிழியர் மீண்டெழுந்தார் இங்கே! இறைசெழியர்
பற்றால், தமிழநம்பி பண்பால் எழுந்தஇதழ்
நற்றமிழை வாழ்த்திடுவோம் நாம்.

சொல்லாய் வறிஞர் சுவைசேர் அருளியார்
வல்லாண்மை ஆய்வு வளரட்டும்! வெல்லுதிறல்
பாட்டும், உரையும், பழந்தமிழ்ச் சீர்மையும்
கூட்டி மலர்க குளிர்ந்து.

கொஞ்சும் தமிழும் குறளார் திருநெறியும்
நெஞ்செலாம் சென்று நிறையட்டும்! - அஞ்சாமல்
முன்னர் தமிழ்போற்றும் முத்திரை ஆட்சியரை
நன்னர் வரச்செய்வோம் நாம்.

- **தமிழ்ச்செம்மல்,**
**திருக்குறள் நாவை.சிவம், மணற்பாறை**

# 'கவிதை'யும் 'கவிஞ'னும்

**- பேராசிரியர் ம. இலெ. தங்கப்பா**

தனித் தமிழ் நூற்றாண்டினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். பொதுவாகத் தனித்தமிழ் பற்றி ஏற்கெனவே மிகுதியாகப் பேசிவிட்டோம். எனவே சிறப்பாக இன்று நம் பாவலர்கள் நடுவில் பரவலாக வழங்கும் 'கவிதை', 'கவிஞன்' ஆகிய இருசொற்களை மட்டும் இங்குப் பார்க்கலாம்.

பாட்டு என்பதைக் குறிக்கத் தமிழில் பாடல், செய்யுள், தூக்கு என்ற சொற்கள் உள்ளன. தூக்கு இன்று வழக்கில் இல்லை. செய்யுள், யாப்பு வடிவத்தை முதன்மைப்படுத்தும் சொல்லாகவும் பாட்டு, பாடல் என்பன பாத் தன்மையை முதன்மைப் படுத்தும் சொற்களாகவும் இன்று நம்மால் கொள்ளப்பட்டுள்ளன.

புலவர், பாவலர் என்னும் தமிழ்ச் சொற்களிலும், புலவர் என்பது அறிவாற்றலை முதன்மைப் படுத்தும் சொல்லாகவும், பாவலர் என்பது பாடல்புனையும் தன்மையை முன்னிறுத்தும் சொல்லாகவும் இன்று வழக்கில் உள.

இவ்வாறு பொருள் பொதிந்த அழகிய சொற்கள் தமிழில் இருக்கப், பாடலைக் கவிதை என்றும் பாவலனைக் கவிஞன் என்றும் வட சொற்கொண்டு கூறும் வழக்கும் இன்று எப்படியோ தமிழில் புகுந்துள்ளது. கவிதை வடசொல், கவிஞன் முன்பாதி வடசொல்லும் பின்பாதி தமிழுமாய் நிற்பது.

இது நம் விழிப்பின்மையால் நேர்ந்ததே யன்றி வேறு வகையில் அன்று. அச் சொற்களில் எச் சிறப்பும் இல்லை. அவற்றைப் பயன்படுத்தத் தேவையும் வந்துவிடவில்லை.

எல்லாத் தேவையற்ற வடசொற்களையும் நீக்குவது போலவே இவ்விரு சொற்களையும் நீக்கிவிடத்தானே வேண்டும். இவ்விரு சொற்களை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டிருப்பது ஏன் என்ற வினா எழுதல் கூடும்.

நம் பாவலர் பலர் இவற்றைவிடாது பற்றிக் கொண்டிருப்பதுடன் இவற்றைத் தமிழ்ச் சொற்கள் என்று நிலை நாட்டவும் முயல்கின்றனர். பாவேந்தர் பாரதிதாசன் இவற்றைத் தமிழ்ச் சொல் என்கின்றார். (இது ஒரு வலிந்த ஆய்வு, உண்மைக்கு மாறானது) கவிஞர் என்ற சொல்லை முன்னொட்டாகப் போட்டுக் கொள்வதில் நம் பாவலர் பலர் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இவை கடியத் தக்கன ஆயினும், இச் சொற்கள் இரண்டையும் தனியாக எடுத்துக் கொண்டு பேச முதன்மையான காரணம், தமிழின் உயிர்நிலையான சொற்களாகிய பாட்டு, பாவலர் ஆகிய இரு சொற்களின் முதுகில் ஏறி இவை அமர்ந்து கொண்டுள்ளன என்பதே ஆகும்.

பாட்டு, பாவலர் ஆகியவை தமிழுக்கு உயிர்நிலையான சொற்கள். உலகுக்கே பாட்டினைத் தந்தது தமிழ், உலகின் முதற் பாவலர்களும் தமிழ்ப் பாவலர்களே.

உலகின் முதன் மொழி தமிழ் என்ற உண்மை பல்வேறு அறிவியல் ஆய்வுகளால் இன்று நன்கு நிலை நாட்டப்பட்டுள்ளது. ஆதலின் மாந்த இனத்தின் முதற்பாட்டு தமிழ்ப் பாட்டே, முதற் பாவலர் தமிழ்ப் பாவலரே என்று கொள்ள என்ன தடை?

எனவே இந்தச் சொற்களைப் புறந்தள்ளிவிட்டு இன்று கவிதை கவிஞர் என்ற சொற்களைப் பயன்படுத்துவது தமிழின் பெருமைக்கு இழுக்கே யாகும்.

நமக்கென்று அம்மா, அப்பா இருக்க, அவர்களை மம்மி டாடி என அழைக்கலாமா? இது இன்று நமக்கு எவ்வளவு இழுக்குத் தருவதாக உள்ளது. இவ்வாறே நமக்கென்று பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பாட்டும் பாவலரும் இருக்கக் கவிதை கவிஞர் என்ற வட சொற்களைப் பயன்படுத்தலாமா?

இவை பெரு வழக்காகிவிட்டனவே என்று கூறலாம். பெரு வழக்கானால் எல்லாம் சரி என்றாகிவிடா. பெருவழக்கு விழிப்பின்மையால் நிகழ்கின்றது. பெருவழக்கு என்ற கருத்தை முன்வைத்தால் இன்று தனித் தமிழ்க் கொள்கைக்கு இடமில்லாமற்

போய்விடுமே. நாம் தனித்தமிழ் என்று குருட்டுத் தனமாக எதையும் பேசவில்லை. தமிழுக்குத் தேவையில்லாதவையும், தமிழ் மரபு பிறழ்ந்தவையும் தமிழின் தனிச்சிறப்பையும் அழகையும் மூடி மறைப்பவையுமான சொற்களையே நாம் கடிந்தொதுக்குகின்றோம்.

தனித்தமிழ் நூற்றாண்டினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். கடந்த நூறாண்டுகட்கு முன்தமிழில் பெருவழக்காக இருந்த பல வடசொற்களை இன்று பொதுமக்களே தவிர்த்துவிட்டனர். இதனால் தமிழின் அழகு கூடியிருக்கின்றதே யன்றிக் கடுகளவும் குறைந்துவிடவில்லை.

எனவே, பாட்டு பாவலர் என்ற இனிய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதால் தமிழின் அழகு இயல்பு நிலையில் மிளிர்வதோடு தமிழின் பெருமிதமும் உயர்ந்து நிற்கும்.

இத் தனித்தமிழ் நூற்றாண்டின் உறுதி ஏற்பாக நம் கவிதையன்பர்கள் பாட்டன்பராய் மாறுக, நம் கவிஞர்கள் பாவலராய்ப் பெருமிதம் உறுக என அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

*இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்*
*குன்ற வருப விடல்*

**(நன்றி: தெளிதமிழ் - பாவலர் தங்கப்பா ஐயா ஆசிரியராக இருந்தபோது எழுதிய ஆசிரியவுரை)**

---

## தமிழர்க்குத் தமிழ் உயிர்!

*தமிழ்ப்பற்றை ஊட்டாத தமிழ்க்கல்வி*
*தமிழர்க்குத் தீங்கு செய்யும்!*
*தமிழ்ப்பற்றை எழுப்பாத கணக்காயர்*
*தருந்தமிழால் தமிழர் தாழ்வார்!*
*தமிழ்ப்பற்றை வளர்க்காத மாணவரால்*
*தமிழ்நாட்டைக் கேடு சூழும்!*
*தமிழ்ப்பற்றுக் கொள்ளாத தலைவரெல்லாம்*
*தமிழ்நாட்டுப் பகைவராமே!*

- **பாவலரேறு பெருஞ்சித்திரனார் (1960)**

---

ஏர்வினைக் கிணையிலை! (ஏர் + வினைக்கு + இணை + இலை)